24-11-2024 காலை முரளி ஓம் சாந்தி ''அவ்யக்த பாப்தாதா'' ரிவைஸ் 15.12.2002

சமயத்தின் அனுசாரம் இலட்சியம் மற்றும் இலட்சணத்தின் சமநிலை மூலம் தந்தைக்கு சமம் ஆகுங்கள்

இன்று நாலாபுறங்களிலும் உள்ள அனைத்து சுவமானத்தில் (சுயபெருமையில்) நிலைத்திருக்கும் குழந்தைகளை பார்த்து மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கின்றார்கள். இந்த சங்கமயுகத்தில் குழந்தை களாகிய உங்களுக்கு சுவமானம் என்ன கிடைத்திருக்கிறதோ, அதை விட பெரிய சுவமானம் முழு கல்பத்தில் எந்தவொரு ஆத்மாவிற்கும் கிடைக்க முடியாது. எவ்வளவு பெரிய சுவமானம் என்பதை அறிந்திருக்கிறீர்களா? சுவமானத்தின் போதை எவ்வளவு பெரியது, இது நினைவில் உள்ளதா? சுவமானத்தின் மாலை மிகப் பெரியதாக உள்ளது. ஒரு ஒரு மணியையும் எண்ணிக் கொண்டே செல்லுங்கள், மேலும், சுவமானத்தின் போதையில் லவ்லீன் (அன்பில் மூழ்குதல்) ஆகிவிடுங்கள். இந்த சுவமானம் அதாவது பட்டங்கள் சுயம் பாப்தாதா மூலம் கிடைத்திருக்கின்றன. பரமாத்மா மூலம் சுவமானம் கிடைத்திருக்கிறது. ஆகையினால், இந்த சுவமானத்தின் ஆன்மிக போதையை எந்தவொரு அதிகாரத்தினாலும் அசைக்க முடியாது, ஏனெனில், சர்வசக்திவான் மூலம் கிடைத்துள்ளது.

பாப்தாதா இன்று அமிர்தவேளையில் முழு விஷ்வத்தின் அனைத்து குழந்தைகளிடமும் வலம் வந்து, ஒவ்வொரு குழந்தையின் நினைவில் எத்தனை சுவமானங்களின் மாலை உள்ளன என்று பார்த்தார்கள். மாலையை தாரணை செய்வது என்றால் நினைவு மூலம் அதே ஸ்திதியில் நிலைத் திருப்பதாகும். இந்த நினைவின் ஸ்திதி எந்தளவு உள்ளது என்று தன்னை சோதனை செய்யுங்கள். சுவமானத்தின் நம்பிக்கை மற்றும் அதனுடைய ஆன்மிக போதை ஆகிய இரண்டின் சமநிலை எந்தளவு உள்ளது? என்பதை பாப்தாதா பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஞானம் நிறைந்தவராக ஆகுவது நம்பிக்கை ஆகும் மற்றும் சக்திசாலி ஆகுவது ஆன்மிக போதை ஆகும். ஞானம் நிறைந்த நிலையில் கூட இரண்டு விதமானவர்களை பார்த்தார்கள் - ஒன்று ஞானம் நிறைந்தவர்கள், இரண்டாவது ஞான சொரூபமானவர்கள், இப்பொழுது நான் யார் என்று தன்னை கேளுங்கள். குழந்தைகளுடைய இலட்சியம் மிக உயர்ந்ததாக உள்ளது என்பதை பாப்தாதா அறிந்திருக் கின்றார்கள். இலட்சியம் உயர்ந்ததாக உள்ளது அல்லவா, உயர்ந்த இலட்சியம் என்ன உள்ளது? பாப்சமான் ஆகப் போகிறோம் என்று அனைவரும் கூறுகின்றீர்கள். தந்தை உயர்ந்ததிலும் உயர்ந்தவர் எனும்போது தந்தைக்கு சமமானவர் ஆகுவதற்கான இலட்சியம் எவ்வளவு உயர்ந்தது! இலட்சியத்தைப் பார்த்து பாப்தாதா மிகவும் மகிழ்ச்சி அடைகின்றார்கள், ஆனால், . . . ஆனால், என்ன வென்று சொல்லட்டுமா? ஆனால் என்ன . . . அதை டீச்சர்கள் மற்றும் இரட்டை அயல்நாட்டினர் கேட்பீர்களா? புரிந்து கொண்டிருப்பீர்கள். பாப்தாதா இலட்சியம் மற்றும் இலட்சணம் சமமாக இருக்க வேண்டும் என விரும்புகின்றார்கள். இலட்சியம் மற்றும் இலட்சணம் அதாவது நடைமுறை ஸ்திதி சமமாக உள்ளதா என்று இப்பொழுது தன்னிடம் கேளுங்கள். ஏனெனில், இலட்சியம் மற்றும் இலட்சணத்தில் சமமாகுவது - இதுவே தந்தைக்கு சமம் ஆகுவதாகும்.

சமயத்தின் அனுசாரம் இந்த சமநிலையை அருகாமையில் கொண்டு வாருங்கள்.

நிகழ்கால சமயத்தில் பாப்தாதாவால் குழந்தைகளுடைய ஒரு விசயத்தைப் பார்க்க முடியவில்லை. சில குழந்தைகள் வெவ்வேறு விதமாக தந்தைக்கு சமம் ஆகுவதற்கான உழைப்பு செய்கின்றார்கள், தந்தையின் அன்பிற்கு முன்னால் உழைப்பதற்கான அவசியமே இல்லை. எங்கே அன்பு உள்ளதோ, அங்கே உழைப்பு இருக்காது. தேக அபிமானத்தின் தலைகீழான போதை இயல்பான தன்மை (நேச்சர்) ஆகிவிட்டது, இயற்கையானதாக (நேச்சுரல்) ஆகிவிட்டது. தேக அபிமானத்தில் வருவதற்கு முயற்சி செய்ய வேண்டியுள்ளதா என்ன? அல்லது 63 பிறவிகள் முயற்சி செய்தீர்களா? இயல்பான தன்மை ஆகிவிட்டது, இயற்கையானதாக ஆகிவிட்டது. இதனால், இப்பொழுதும் கூட சில நேரங்களில் ஆத்ம உணர்விற்கு பதிலாக தேகத்தில் வந்துவிடுகிறோம் என்று கூறுகின்றீர்கள். எவ்வாறு தேக அபிமானம் நேச்சராக மற்றும் நேச்சுரலாக உள்ளதோ, அதுபோல் இப்பொழுது ஆத்ம அபிமானி ஸ்திதியும் நேச்சுரல் மற்றும் நேச்சர் ஆகவேண்டும், நேச்சர் மாறுவது கடினமாக உள்ளது. இப்பொழுதும் கூட சில நேரங்களில் என்னுடைய பாவனை அதுவல்ல, ஆனால், அது எனது நேச்சர் ஆகும் என்று கூறுகிறீர்கள் அல்லவா. அந்த நேச்சரை நேச்சுரல் ஆக்கியிருக்கின்றீர்கள், ஆனால், பாப்சமான் நேச்சரை நேச்சுரல் ஆக்கமுடியாதா! தவறான நேச்சருக்கு வசம் ஆகிவிடுகின்றீர்கள் மற்றும் பாப்சமான் ஆகுவதற்கான யதார்த்தமான நேச்சரை உருவாக்குவதில் உழைப்பு ஏன்? பாப்தாதா இப்பொழுது அனைத்து குழந்தைகளிடமும் ஆத்ம அபிமானி நிலை நேச்சுரல் நேச்சராக இருப்பதைப் பார்ப்பதற்கு விரும்புகின்றார்கள். பிரம்மா பாபாவிற்கு ஆத்ம அபிமானி ஸ்திதியானது போகும்போதும், வரும்போதும், எந்தவொரு காரியம் செய்யும்போதும் நேச்சுரல் நேச்சராக இருந்ததை பார்த்திருக்கின்றீர்கள்.

ஃபரிஷ்தா நிலை, கர்மாதீத நிலை, பாப்சமான் நிலையை நேச்சுரலாக எவ்வாறு ஆக்குவது? என்பதை பற்றிய இந்த உரையாடலை தற்சமயத்தில் விசே'மாக தாதிகள் செய்கின்றார்கள் என்ற செய்தியை பாப்தாதா கேள்வியுற்றார்கள். நேச்சர் ஆகிவிட வேண்டும் என்ற இந்த உரையாடல் செய்கின்றீர்கள் அல்லவா! ஃபரிஷ்தா ஆகிவிட வேண்டும், கர்மாதீத் ஆகிவிட வேண்டும், தந்தை பிரத்யட்சம் ஆகிவிட வேண்டும் என்பதுவே தாதிக்கும் அடிக்கடி வருகிறது அல்லவா. ஃபரிஷ்தா நிலை அல்லது நிராகாரி கர்மாதீத நிலை உருவாகுவதற்கான விசே' சாதனம் - நிர்அகங்காரி ஆகுவதாகும். நிர்அகங்காரி தான் நிராகாரி ஆகமுடியும். ஆகையினால், தந்தை பிரம்மா மூலமாக இறுதி மந்திரத்தில் நிராகாரியின் கூடவே நிர்அகங்காரி என்று கூறினார். தன்னுடைய தேகம் அல்லது பிறருடைய தேகத்தில் மாட்டுவது, இதை மட்டும் தேக அகங்காரம் அல்லது தேக உணர்வு என்று சொல்லப்படுவது இல்லை. தேக அகங்காரமும் உள்ளது, தேக உணர்வும் உள்ளது. தன்னுடைய தேகம் அல்லது பிறருடைய தேகத்தின் உணர்வில் இருப்பது, பற்றில் இருப்பது - இதில் பெரும்பான்மையினர் தேர்ச்சி பெற்றிருக் கிறார்கள். யார் முயற்சி செய்வதில் ஆர்வத்துடன் இருக்கின்றார்களோ, உண்மையான முயற்சி யாளர்களோ, அவர்கள் இந்த பெரிய ரூபத்தில் இருந்து கடந்து இருக்கின்றார்கள். ஆனால், தேக உணர்வினுடைய அனேக சூட்சும ரூபம் உள்ளன, இவற்றின் பட்டியலை

தங்களுக்குள் சேர்ந்து உருவாக்க வேண்டும். பாப்தாதா இன்று கூறப்போவதில்லை. இன்று இந்தளவு சமிக்ஞையே அதிகமாகும், ஏனெனில், அனைவரும் புத்திசாலி ஆவீர்கள். நீங்கள் அனைவரும் அறிவீர்கள் அல்லவா, ஒருவேளை, அனைவரிடமும் கேட்டால் அனைவரும் மிகவும் புத்திசாலித்தனத்துடன் சொல்வீர்கள். ஆனால், பாப்தாதா சிறிய, சகஜமான முயற்சியை மட்டும் சொல்கின்றார்கள் - சதா எண்ணம், சொல், செயல், சம்பந்தம், தொடர்பில் இறுதி மந்திரத்தின் மூன்று வார்த்தைகளை (நிராகாரி, நிர்அகங்காரி, நிர்விகாரி) சதா நினைவில் வைத்திடுங்கள். சங்கல்பம் செய்கின்றீர்கள் எனில், மகாமந்திரம் சம்பன்னமாக உள்ளதா? என்று சோதனை செய்யுங்கள். அதுபோலவே பேச்சு, கர்மம் ஆகிய அனைத்திலும் இந்த மூன்று வார்த்தைகளை மட்டும் நினைவில் கொள்ளுங்கள் மற்றும் சமநிலையைக் கொண்டு வாருங்கள். இது சுலபம் தானே? முழு முரளியை நினைவு செய்யுங்கள் என்று கூறவில்லை, மூன்று வார்த்தைகளை மட்டும் நினைவு செய்யும்படி கூறுகின்றோம். இந்த மகாமந்திரம் சங்கல்பத்தையும் சிரேஷ்டம் ஆக்கிவிடும். பேச்சில் பணிவை கொண்டு வந்துவிடும். கர்மத்தில் சேவை உணர்வை கொண்டு வந்துவிடும். சம்பந்தம், தொடர்பில் சதா சுபபாவனை, சுபவிருப்பத்தின் விருத்தியை உருவாக்கிவிடும்.

பாப்தாதா சேவைக்கான சமாச்சாரத்தையும் கேட்கின்றார்கள். தற்சமயத்தில் சேவையில் விதவித மான கோர்ஸ் எடுக்கின்றீர்கள், ஆனால், இப்பொழுது ஒரு கோர்ஸ் மீதம் உள்ளது. அது ஒவ்வொரு ஆத்மாவிற்கும் என்ன சக்தி தேவையோ, அந்த ஃபோர்ஸின் (சக்தி) கோர்ஸ் எடுக்க வேண்டும். சக்தியை நிரப்புவதற்கான கோர்ஸ், பேச்சு மூலம் சொல்வதற்கான கோர்ஸ் அல்ல, பேச்சின் கூடவே சக்தியை நிரப்புவதற்கான கோர்சும் இருக்க வேண்டும். இதன் மூலம் நன்றாக உள்ளது, நன்றாக உள்ளது என கூறாமல், நன்றாக ஆகிவிட வேண்டும். இன்று எனக்கு கொஞ்சம் சக்தி கிடைத்தது என்று வர்ணனை செய்ய வேண்டும். கொஞ்சம் அனுபவம் ஏற்பட்டாலும் அந்த ஆத்மாக்களுக்கு அது அதிகமே. கோர்ஸ் கொடுங்கள், ஆனால், தனக்கு கொடுத்துவிட்டு பிறகு சொல்லுங்கள். எனவே, பாப்தாதா என்ன விரும்புகின்றார்கள் என்று கேட்டீர்களா? இலட்சியம் மற்றும் இலட்சணத்தை சமம் ஆக்குங்கள். அனைவருடைய இலட்சியத்தைப் பாôத்து பாப்தாதா மிக மிக மகிழ்ச்சி அடைகின்றார் கள். இப்பொழுது சமமாக மட்டும் ஆக்குங்கள், அப்பொழுது தந்தைக்கு சமமாக மிகவும் சகஜமாக ஆகிவிடுவீர்கள்.

பாப்தாதாவோ குழந்தைகளை சமான் நிலைக்கும் மேலே, தன்னை விடவும் உயர்வாகப் பார்க்கின்றார்கள். சதா பாப்தாதா குழந்தைகளை தலையின் கிரீடம் என்று கூறுகின்றார்கள். எனில், கிரீடமோ தலையை விட மேலே உயர்வாக உள்ளது அல்லவா. டீச்சர்ஸ் - நீங்கள் தலையின் கிரீடமாக இருக்கின்றீர்களா?

டீச்சர்களுடன்: பாருங்கள், எத்தனை டீச்சர்கள் உள்ளீர்கள்! ஒரு குரூப்பில் இத்தனை டீச்சர்கள் இருக்கின்றீர்கள் எனில், ஒவ்வொரு குரூப்பிலும் எத்தனை டீச்சர்கள் இருப்பார்கள்! டீச்சர்கள் பாப்தாதாவின் ஒரு ஆசையை பூர்த்தி செய்வதற்கான சங்கல்பம் செய்திருக்கின்றார்கள், ஆனால், முன்னால் கொண்டு வரவில்லை. அது என்ன என்று அறிவீர்களா? ஒன்று - இப்பொழுது வாரிசுகளின் மாலையை உருவாக்குங்கள் என்று பாப்தாதா கூறியிருக்கின்றார்கள்.

வாரிசுகளின் மாலை, பொது வான மாலை அல்ல. இரண்டாவது - சம்பந்தம், தொடர்பில் வருபவர்களை மைக் ஆக்குங்கள். நீங்கள் சொற்பொழிவு செய்யாதீர்கள் ஆனால், அவர்கள் உங்கள் தரப்பில் இருந்து மீடியா (செய்தியை பரப்புபவர்) ஆகிவிட வேண்டும். தன்னுடைய மீடியாவை உருவாக்குங்கள். மீடியா என்ன செய்கிறது? தப்பும், தவறுமான செய்தியை பரப்புகிறது அல்லவா! மீடியாவிற்கு சமமாக பிரத்யட்சதாவின் சப்தத்தை பரப்ப வேண்டும், அப்படிப்பட்ட மைக்கை தயார் செய்யுங்கள். பகவான் வந்துவிட்டார், பகவான் வந்துவிட்டார் . . . என்று நீங்கள் கூறும்பொழுது அவர்கள் சாதாரணமாக நினைக் கின்றார்கள். ஆனால், உங்கள் தரப்பிலிருந்து இன்னொருவர் கூறவேண்டும், அதிகாரம் உள்ளவர்கள் கூறவேண்டும், அவர்கள் முதலில் உங்களை சக்திகளாக பிரத்யட்சம் செய்ய வேண்டும். எப்பொழுது சக்திகள் பிரத்யட்சம் ஆகுவார்களோ, அப்பொழுதே தந்தை பிரத்யட்சம் ஆகுவார். எனவே, உருவாக்குங்கள், மீடியாவை தயார் செய்யுங்கள். செய்திருக்கின்றீர்களா? என்று பார்ப்பார்கள். கங்கணம் கூட போதுமானதே, மாலையை விட்டுவிடுங்கள், தயார் செய்திருக்கின்றீர்களா? யார் அப்படி தயார் செய்திருக்கின்றீர்களோ, அவர்கள் கை உயர்த்துங்கள். பாப்தாதா என்ன செய்திருக் கின்றீர்கள் என்று பார்ப்பார்கள், தைரியம் நன்றாக வைத்திருக்கின்றீர்கள். டீச்சர்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டீர்களா? சிவராத்திரியில் வாரிசு குவாலிட்டியை (தரம்) தயார் செய்யுங்கள். மைக்கை தயார் செய்யுங்கள், அப்பொழுதே அடுத்த வருட சிவராத்திரியில் அனைவருடைய வாயில் இருந்தும் சிவதந்தை வந்துவிட்டார் என்ற சப்தம் வெளிப்படும். அத்தகைய சிவராத்திரியை கொண்டாடுங்கள். நிகழ்ச்சியை மிகவும் நன்றாக உருவாக்கி இருக்கின்றீர்கள். நிகழ்ச்சி அனை வருக்கும் அனுப்பப்பட்டுள்ளது அல்லவா. நிகழ்ச்சியையோ சரியாக உருவாக்கி இருக்கின்றீர்கள், ஆனால், ஒவ்வொரு நிகழ்ச்சியில் இருந்தும் யாராவது மைக் தயார் ஆகவேண்டும், யாராவது வாரிசு தயார் ஆகவேண்டும். இதற்கான முயற்சி செய்யுங்கள், சொற்பொழிவு செய்தார்கள், சென்று விட்டார்கள், இவ்வாறு அல்ல. இதுவோ 66 வருடங்களாக நடந்திருக்கிறது. மேலும், 50 வருட சேவை யையும் கொண்டாடிவிட்டீர்கள். இப்பொழுது சிவராத்திரியின் வைரவிழா கொண்டாடுங்கள். இந்த இரண்டு விதமான ஆத்மாக்களை தயார் செய்யுங்கள், பிறகு பாருங்கள், முரசு கொட்டுகிறதா அல்லது இல்லையா என்று. முரசு நீங்கள் கொட்டமாட்டீர்கள். நீங்களோ தேவிகளாகி காட்சி காண்பிப்பீர்கள். முரசு கொட்டுபவர்களை தயார் செய்யுங்கள். சிவசக்திகள் வந்தனர் என்று நடைமுறையில் பாடல் ஒலிக்க வேண்டும். சிவராத்திரியில் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டீர்களா! வெறும் சொற் பொழிவாற்றி முடித்து விடக்கூடாது. பிறகு, பாபா 500, 1000, இலட்சம் ஆத்மாக்கள் வந்தனர் என்று எழுதுவீர்கள். வந்தனர், செய்தி கொடுத்தீர்கள், ஆனால், வாரிசு எத்தனை பேர் உருவானார்கள், மைக் எத்தனை பேர் உருவானார்கள், இப்பொழுது இந்த செய்தியைக் கொடுக்க வேண்டும். இதுவரை என்ன செய்தீர்களோ, நிலத்தை உருவாக்கினீர்கள், செய்தி கொடுத்தீர்கள், அதற்கு பாபா நன்றாக செய்தீர்கள் என்று கூறுகின்றார்கள், அந்த சேவையும் வீணாகி விடவில்லை, சிறந்ததாகவே நடந்தது. பிரஜைகள் உருவாகி இருக்கின்றனர், இராயல் குடும்பத்தினர் உருவாகியிருக்கின்றனர், ஆனால், இராஜா, இராணியும் தேவை. சிம்மாசனதாரியான இராஜா, இராணி அல்ல, இராஜா, இராணியுடன் அங்கே தர்பாரிலும் இராஜாவிற்கு சமமாக அமர்வார்கள், அத்தகையவர்களை உருவாக்குங்கள். இராஜ்ய தர்பார் அழகானதாக இருக்க வேண்டும்.

சிவராத்திரியில் என்ன செய்ய வேண்டும் என்பதை கேட்டீர்களா? பாண்டவர்கள் கேட்டுக் கொண்டிருக்கின்றீர்கள். கை உயர்த்துங்கள். கவனம் கொடுத்தீர்களா? நல்லது. பெரிய பெரிய மகாரதிகள் அமர்ந்திருக்கின்றீர்கள். பாப்தாதா மகிழ்ச்சி அடைகின்றார்கள், இது கூட உள்ளத்தின் அன்பாகும். ஏனென்றால், பிரத்யட்சம் எப்பொழுது ஏற்படும், எப்பொழுது ஏற்படும் . . . என்று உங்கள் அனைவருக்கும் சங்கல்பம் வருகிறது அல்லவா, ஆகையினால், பாப்தாதா சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். மதுபனில் இருப்பவர்கள் என்ன கேட்டீர்கள்? மதுபனில் இருப்பவர்கள் கேட்டீர்களா? மதுபன், சாந்திவனம், ஞான சரோவரில் இருப்பவர்கள், அனைவரும் மதுபன் நிவாசிகளே. நல்லது.

மதுபனில் இருந்து முரசு கொட்டும், எங்கிருந்து முரசு கொட்டும்? (டில்லியில் இருந்து) மதுபனில் இருந்து இல்லையா? நாலாபுறங்களில் இருந்தும் கொட்டும் என்று கூறுங்கள். ஒரு பக்கத்தில் இருந்து கொட்டாது. மதுபனில் இருந்தும் கொட்டப்படும், நாலாபுறங்களில் இருந்தும் கொட்டப்படும், அப்பொழுதே கும்பகர்ணன் விழித்தெழுவார். மதுபனைச் சேர்ந்தவர்கள் எவ்வாறு சேவையில் களைப்பற்றவராகி சேவையின் பாகத்தை நடித்துக் கொண்டிருக்கின்றீர்கள் அல்லவா, அவ்வாறு இந்த மனதின் சேவையையும் செய்து கொண்டே இருங்கள். கர்மத்தில் மட்டுமல்ல, எண்ணம், சொல், செயல் மூன்று சேவையும் செய்து கொண்டு இருக்கின்றீர்கள், மேலும், அதிகப்படுத்த வேண்டும். நல்லது. மதுபனில் இருப்பவர்களை மறக்கவில்லை. பாப்தாதா வருவதோ மதுபனில், ஆனால், மதுபனின் பெயரையே எடுப்பதில்லை என்று மதுபனில் இருப்பவர்கள் நினைக்கின்றனர். மதுபனமோ சதா நினைவில் இருக்கிறது. மதுபன் இல்லை என்றால் இவர்கள் எங்கு வருவார்கள்! சேவாதாரி களாகிய நீங்கள் சேவை செய்யவில்லை என்றால் இவர்கள் சாப்பிடுவது, இருப்பது எப்படி நடக்கும்! மதுபனில் இருப்பவர்களை பாப்தாதாவும் உள்ளத்தில் இருந்து நினைவு செய்கின்றார்கள் மற்றும் உள்ளத்தில் இருந்து ஆசீர்வாதங்கள் கொடுக்கின்றார்கள். நல்லது. மதுபனின் மீதும் அன்பு உள்ளது, டீச்சர்கள் மீதும் அன்பு உள்ளது, இனிமையிலும் இனிமையான தாய்மார்கள் மீதும் அன்பு உள்ளது, மேலும், கூடவே மகாவீர் பாண்டவர்கள் மீதும் அன்பு உள்ளது. பாண்டவர்கள் இல்லாமலும் கதி கிடையாது, ஆகையினால், சதுர்புஜ் (நான்கு கரங்களை கொண்ட விஷ்ணு) ரூபத்திற்கு மகிமை அதிகமாக உள்ளது. பாண்டவர்கள் மற்றும் சக்திகள் ஆகிய இருவருடைய இணைந்த ரூபமே சதுர்புஜ் விஷ்ணு ஆகும். நல்லது.

மதுபனில் உள்ள பாண்டவர்களாகிய உங்கள் அனைவருக்கும் போதை இருக்கிறது அல்லவா? வெற்றிக்கான போதை, வேறு போதை அல்ல. நன்றாக இருக்கின்றீர்கள், பாண்டவபவனில் பெரும்பான்மையாக பாண்டவர்கள் உள்ளனர், பாண்டவர்கள் இல்லை என்றால், உங்கள் அனை வருக்கும் மதுபனில் போதை வராது, ஆகையினால், உங்களை மகிழ்ச்சியாக வைத்திருக்கக் கூடிய, உணவளிக்கக் கூடிய, பறக்க வைக்கக்கூடிய மகிமை மதுபன் நிவாசிகளுக்கே உரியது. இன்று பாப்தாதாவிற்கு அமிர்தவேளை முதல் மதுபன் நிவாசிகளின் நினைவு வந்துகொண்டே இருக்கின்றது. அவர்கள் இங்கே இருக்கலாம், மேலே அமர்ந்து இருக்கலாம், மதுபனைச் சேர்ந்த யாராவது இங்கே கூட டியூட்டியில் (பணியில்) இருக்கலாம், ஆனால், நாலாபுறங்களிலும் உள்ள மதுபன் நிவாசிகளுக்கு பாப்தாதா அமிர்தவேளை முதல் நினைவு கொடுத்தார்கள்.

நல்லது.

பாப்தாதா என்ன ஆன்மிக எக்சர்சைஸ் (பயிற்சி) கொடுத்து இருக்கின்றார்களோ, அதை முழு நாளில் எத்தனை முறை செய்கின்றீர்கள்? மேலும், எவ்வளவு நேரத்தில் செய்கின்றீர்கள்? நிராகாரி மற்றும் ஃபரிஷ்தா. தந்தை மற்றும் தாதா, அவ்வப்பொழுது நிராகாரி, அவ்வப்பொழுது ஃபரிஷ்தா சொரூபம். இரண்டிலும் தேக உணர்வு இருக்காது. எனவே, தேக உணர்வில் இருந்து கடந்து செல்ல வேண்டு மென்றால், இந்த ஆன்மிக எக்சர்சைஸை கர்மம் செய்யும்போதும், தன்னுடைய பணியை செய்யும் போதும் கூட ஒரு நொடியில் பயிற்சி செய்ய முடியும். அவ்வப்பொழுது நிராகாரி, அவ்வப்பொழுது ஃபரிஷ்தா - இது ஒரு இயற்கையான பயிற்சி ஆகவேண்டும். நல்லது. (பாப்தாதா டிரில் செய்வித்தார்கள்)

இதில் நிரந்தரமானவர் ஆகுக! நாலாபுறங்களிலும் உள்ள பாப்தாதாவின் நினைவில் மூழ்கி இருக்கக் கூடிய, தந்தைக்கு சமம் ஆகுவதற்கான இலட்சியம் மற்றும் இலட்சணத்தை சமமாக ஆக்கக்கூடிய, யார் மூலை மூலையிலும் அறிவியல் சாதனங்களுடன் இரவு, பகல் விழித்து அமர்ந்து இருக் கின்றார்களோ, அந்த குழந்தைகளுக்கும் பாப்தாதா அன்பு நினைவுகள், வாழ்த்துக்கள் மற்றும் உள்ளத்தின் ஆசீர்வாதங்களை கொடுத்துக் கொண்டு இருக்கின்றார்கள். இந்த சமயம் அனை வருடைய உள்ளத்தில் திலாராம் (உள்ளத்தை கொள்ளை கொண்ட) தந்தையின் நினைவு நிறைந்திருக்கின்றது என்பதை பாப்தாதா அறிந்திருக்கின்றார்கள். ஒவ்வொரு மூலை மூலையிலும் அமர்ந்து இருக்கக்கூடிய குழந்தைகளுக்கு பாப்தாதா ஒவ்வொருவரின் பெயர் சகிதமாக அன்பு நினைவுகள் கொடுத்துக் கொண்டு இருக்கின்றார்கள். பெயர்களின் மாலையை ஜெபித்தால் இரவு முடிந்துவிடும். பாப்தாதா அனைத்து குழந்தைகளுக்கும் நினைவு கொடுக்கின்றார்கள், புரு'ôர்த்தத்தில் எப்படிப்பட்ட நம்பராக வேண்டுமானாலும் இருக்கட்டும், ஆனால், பாப்தாதா சதா ஒவ்வொரு குழந்தை யினுடைய சிரேஷ்ட சுவமானத்திற்கு அன்புநினைவுகள் கொடுக்கின்றார்கள் மற்றும் நமஸ்காரம் செய்கின்றார்கள். அன்புநினைவுகள் கொடுக்கும் சமயம், பாப்தாதாவிற்கு முன்பாக நாலாபுறங் களிலும் உள்ள ஒவ்வொரு குழந்தையினுடைய நினைவும் இருக்கின்றது. எந்தவொரு குழந்தை, எந்தவொரு மூலையில், கிராமத்தில், நகரத்தில், உள்நாட்டில், வெளிநாட்டில், எங்கு வேண்டுமானாலும் இருக்கட்டும், பாப்தாதா அவர்களுக்கு சுவமானத்தின் நினைவை ஏற்படுத்திக் கொண்டே அன்பு நினைவுகள் கொடுக்கின்றார்கள். அனைவரும் அன்புநினைவிற்கு அதிகாரி ஆவீர்கள், ஏனெனில், பாபா என்று கூறிவிட்டீர்கள் என்றால் அன்புநினைவிற்கு அதிகாரிகளே ஆவீர்கள். முன்னால் இருக்கக் கூடிய உங்கள் அனைவரையும் கூட பாப்தாதா சுவமானத்தின் மாலை அணிந்திருக்கக்கூடிய சொரூபத்தில் பார்த்துக் கொண்டு இருக்கின்றார்கள். அனைவருக்கும் பாபசமான் சுவமானத் தினுடைய சொரூபத்தில் அன்புநினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

தாதிஜீ அவர்களுடன்: குணமடைந்துவிட்டீர்கள், இப்பொழுது எந்த நோயும் இல்லை. ஓடிவிட்டது. எங்களிடம் வருகிறது என்றாலும் அது ஒன்றும் பெரிய விசயம் அல்ல என்று அனைவருக்கும் காண்பிப்பதற்காக மட்டுமே அது வந்தது.

அனைத்து தாதிகளும் மிகவும் நல்ல பாகத்தை நடித்துக் கொண்டிருக்கின்றீர்கள்.

பாப்தாதா அனைவருடைய பாகத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைகின்றார்கள். (நிர்மல் சாந்தா தாதியிடம்) ஆதி இரத்தினம் அல்லவா! அனாதி ரூபத்தில் கூட நிராகார தந்தைக்கு அருகாமையில் இருக்கின்றீர்கள், கூடவே இருக்கின்றீர்கள் மற்றும் ஆதி ரூபத்தில் கூட இராஜ்ய தர்பாரில் துணையாக இருக்கின்றீர் கள். சதா இராயல் (அரச) குடும்பத்தின் இராயல் (அரச) உறுப்பினர் ஆவீர்கள் மற்றும் சங்கமத்திலும் கூட ஆதி இரத்தினமாக இருப்பதற்கான பாக்கியம் கிடைத்திருக்கிறது. எனவே, மிகப் பெரிய பாக்கியம் ஆகும், பாக்கியம் உள்ளது அல்லவா? நீங்கள் இருப்பதுவே அனைவருக்கும் வரதானம் ஆகும். நீங்கள் பேசுங்கள், பேசாதிருங்கள், ஏதாவது செய்யுங்கள், செய்யாதிருங்கள் ஆனால், நீங்கள் இருப்பதுவே அனைவருக்கும் வரதானம் ஆகும். நல்லது, ஓம் சாந்தி.

வரதானம் : லௌகீக, அலௌகீக வாழ்க்கையில் எப்பொழுதும் விடுபட்டவராகி பரமாத்ம துணையின் அனுபவம் மூலம் நஷ்டமோஹா (மோகத்தை வென்றவர்) ஆகுக.

பிரபுவினுடைய அன்பின் அனுபவம் செய்வதே சதா விடுபட்டு இருப்பதன் அடையாளம் ஆகும். மேலும், எந்தளவு அன்பு இருக்கிறதோ, அந்தளவு (தந்தையின்) கூடவே இருப்பீர்கள், தனியாக ஆகமாட்டீர்கள். உடன் இருப்பதையே அன்பு என்று கூறப்படுகிறது. எப்பொழுது தந்தை துணையாக இருக்கின்றாரோ, அப்பொழுது அனைத்து சுமைகளையும் தந்தையிடம் கொடுத்துவிட்டு சுயம் இலேசானவர் ஆகிவிடுங்கள், மோகத்தை வென்றவர் ஆகுவதற்கான விதி இதுவே ஆகும். ஆனால், முயற்சியின் பாடத்தில் சதா இந்த வார்த்தையை அடிக்கோடிடுங்கள். லௌகீக மற்றும் அலௌகீக வாழ்க்கையில் சதா விடுபட்டு இருங்கள், அப்பொழுது சதா துணையின் அனுபவம் ஏற்படும்.

சுலோகன்: விகாரங்கள் என்ற பாம்புகளை தன்னுடைய படுக்கை ஆக்கிக் கொண்டீர்கள் என்றால் சகஜயோகி ஆகிவிடுவீர்கள்.